## சுருக்கம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் – 2017–2018ஆம் ஆண்டில் 31.03.2018–ல் பணியாற்றி போனஸ் பெற்ற 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்கள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு பொங்கல்–2019–ஐ முன்னிட்டு செயலாக்க ஊக்கத் தொகை (Performance incentive) வழங்குதல் – அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

---

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அ1)த் துறை

அரசாணை (டி) எண். 10

நாள்: 11.01.2019
விளம்பி வருடம், மார்கழி – 27
திருவள்ளுவர் ஆண்டு – 2049

படிக்க:-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண் எசிபி16/ 050807/2018, நாள் 21.12.2018.

---

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்கள் 2019–ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2017–2018–ம் ஆண்டில் 8.33% போனசும் 11.67% கருணைத் தொகையும் (ம) ஒட்டு மொத்த கருணைத் தொகையும் பெற்ற 'சி' மற்றும் 'டி' பிரிவில் உள்ள 26,202 பணியாளர்களுக்கு செயலாக்க ஊக்கத் தொகை (Performance incentive) ரூ.350/– வழங்க தகுந்த ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கருத்துருவை பரிசீலனை செய்து, 2017–2018ம் ஆண்டில் 31.03.2018–ல் பணியாற்றி போனஸ் பெற்ற 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்கள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஆக மொத்தம் 26,202 பணியாளர்களுக்கு மட்டும் செயலாக்க ஊக்கத் தொகையாக (Performance incentive) தலா ரூ.350/– வழங்கிட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தயானந்த் கட்டாரியா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை –10.
ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை –5.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை –18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை –18.
நிதி (BPE)த் துறை, சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை– 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உணவு அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 11.1.19.